என்ற விவரம் இருக்கிறதா ? இருந்தால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : தலைவரவர்களே, இதுகுறித்த விவரம் தற்போது என்னிடம் இல்லை. ஆனால் பினாமி கடன் வாங்குவதற்குக் காரணமாக இருந்த வருவாய்த் துறையிலுள்ள கீழ்மட்ட ஊழியர்கள், கிராமக் கூட்டுறவுத்துறை அதிகாரிகளின்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திண்டுக்கல் நகரில் குடிநீர் விநியோகம்

*வினா எண். 171—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுரை மாவட்டம் திண்டுக்கல் நகரில் குடிநீர்ப் பற்றாக் குறையை நிவர்த்திக்க என்ன முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அரசு, திண்டுக் கல் நகரின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு 1975-ம் ஆண்டு ரூ. 14·76 லட்சம் செலவில் திண்டுக்கல்நகரில் செயலிலுள்ள குடிநீர்த் திட்டத்தை மேம்படுத்துவதற்கு உத்தரவு அளித்தது. இத்திட்டத்தின்படி, முன்பு சுமார் 1,50,000 மக்களுக்கு நாளொன்றுக்கு அளித்து வந்த 17 லட்சம் காலன்கள் குடி நீரை சுமார் 25 லட்சம் காலன்களாக உயர்த்தி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, திண்டுக்கல் நகரம், மதுரை மாவட்டத்திலேயே மதுரைக்கு அடுத்த பெரிய நகரமாக இருப்பதாலும் அதை இன்னொரு மாவட்டமாக பிரிக்கும் வாய்ப்பு உள்ளதாலும் தற்போது அங்கே குடிநீர் அதிகமாக பற்றாக்குறை இருப்பதால் விரைவிலே இந்த குடிநீர் பற்றாக்குறையைப் போக்க என்ன திட்டத்தை அரசு செயல் படுத்த இருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, 1962 ஆம் ஆண்டிலே தீட்டிய திட்டத்தின் மூலமாக, கிடைக்கக்கூடிய குடிநீர் போதாது என்று கணக்கிட்டு, 1971 ஆம் ஆண்டில் 1,06,000 மக்கட் தொகை இருப்பார்கள் என்று மதிப் பிட்டு, திட்டமிடப்பட்டது. ஆனால் அங்கிருந்த மக்கள் தொகை நாம் எதிர்பார்த்ததற்கு மாறாக 1,28,429 பேர்கள் இருக்கிறார் கள். இதை மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் கருத்தில் கொண்டிருக்க வேண்டும். ஆகவேதான் 1975-ம் ஆண்டு திண்டுக்கல் நகருக்கும் வழியிலுள்ள ஆறு கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க 14.76 இலட்சம் ரூபாயில் மேம்பாட்டுத் திட்டம் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: தலைவரவர்களே, தற்போது திண்டுக்கல் நகருக்கு ஆத்தூர் காமராஜ் நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் கொண்டுசெல்லப்படுகிறது. அந்தப் பகுதியிலிருக்கிற விவசாயிகள் அந்தக் தண்ணீர் எங்களுக்குச் சொந்தம் என்று போராடி வருகிறார்கள். இதுகுறித்து அரசு அறியுமா? என்ன நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, அதுபற்றி அரசு அறியாது.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, திண்டுக்கல் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக தண்ணீர் அதிகமாக வழங்கப்படுகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். கடந்த 6 மாத காலமாக இரண்டு நாட்களுக்கு ஒருமுறைதான் தண்ணீர் விநியோகம் செய்யக்கூடிய கஷ்டநிலை அங்கே இருக்கிறது. அந்த அணைக்கட்டில் இருந்து வரக்கூடிய தண்ணீர் போதுமானது அல்ல என்று மாவட்ட ஆட்சித் தலைவர் பல முறை ரிப்போர்ட் அனுப்பி இருக்கிறார்கள். ஆகவே, கொடைக்கானலிலுள்ள பேரிஜம் லேக்கிலிருந்தும், வைகை அணையிலிருந்தும் இந்த நகருக்கு தண்ணீர் கொண்டுவர அரசு முயற்சி செய்யுமா? இப்போது இருக்கிற கஷ்டத்தைப் போக்க வருகிற தண்ணீரை திண்டுக்கல் நகரின் மேட்டுப்பாங்கான இடங்களுக்கும் கொடுக்க 10, 15 பகுதிகளிலே மேல்நிலை தண்ணீர் தொட்டிகள் கட்டி, விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, 60 கிலோ மீட்டர் தூரத்திற்கு குழாய் போட்டு, இப்போது தண்ணீர் தாராளமாகக் கொடுக்க ஏரியில் போதுமான நீர் உள்ளது. ஆனால் மின்வெட்டின் காரணமாக போதுமான அளவுக்கு தண்ணீர் வழங்க முடியவில்லை. அண்மையில் மின் வெட்டு எடுக்கப்பட்டுவிட்டதால் குடிதண்ணீர் பற்றாக்குறை இருக்காது என்ற தகவல் என்னிடம் இருக்கிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, கடந்த ஒரு மாதமாக திண்டுக்கல் நகரில் பெரும்பாலான நாட்களில் இரவு நேரத்தில் மட்டும் தண்ணீர் விடப்படுகிறது. அதை பகலிலே விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, என்னிடம் இருக்கும் தகவல்படி அண்மையில் மின்சார வெட்டு எடுக்கப்பட்டுவிட்டதால் நகரில் இனி தண்ணீர் பற்றாக்குறை இருக்காது.